
## திராவிடத்தால் வாழ்கிறோம்

973

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்


## உடன்பிறப்பே

நீரை.மகேந்திரன்

129

தி.மு.கழக வரலாற்றில் இடம் பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த இரா.மோகன் அவர்களின் வரலாற்றினைப் பார்க்கலாம்.

# இரா.மோகன்; கை விலங்குக்கு அஞ்சாத கழகச் செயல்வீரர்!




1976-ஆம் ஆண்டு, மிசா நெருக்கடி நிலை காலம். கழக முன்னோடிகள் பலருக்கும், தியாக அனுபவங்கள் உள்ளன. ஈடு இணையில்லாத அந்தத் தியாக சீலர்களின் வரிசையில், கோவை இரா.மோகன் குறிப்பிடத்தக்கவர். அவர் மிசா கைதியாக இருந்தபோது, அவரின் தந்தையார் மறைவுக்கு ஒருநாள் பரோலில், இரண்டு கைகளிலும் விலங்கிடப்பட்டு அழைத்து வரப்பட்டார். அந்தக் காட்சியை, மோகன் கலந்துகொண்ட மேடைகளில் குறிப்பிடத் தவறியதில்லை முத்தமிழறிஞர் கலைஞர். “ஆற்றல் வாய்ந்த பேச்சாளர், சிறந்த நாடாளுமன்றவாதி, சட்டமன்ற உறுப்பினர். கோவை கழகத்தின் நிறம் மாறாத பூக்களில் ஒருவர் இரா.மோகன்” என முத்தமிழறிஞர் போற்றிய உடன்பிறப்பு.

1943-ஆம் ஆண்டு, ஜூலை 3-ஆம் தேதி பிறந்தவர் மோகன். பெற்றோர் ரங்கசாமி - தனலட்சுமி அம்மாள். பள்ளி நாட்களிலேயே கழகத்தின் சார்பில், நடைபெற்ற பொதுக்கூட்டங்களில், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் உள்ளிட்ட தலைவர்களின் சொற்பொழிவுகளைக் கேட்டு, கழகத்தில் தன்னை இணைத்துக்கொண்டு பணியாற்றியவர்.

தனது 13 வயதிலேயே நகர்மன்றத் தேர்தலில் கையில் இருவண்ணக் கொடியேந்தி, கழக வேட்பாளர்களுக்காக வீதி வீதியாக வாக்கு சேகரித்தவர் என தலைமைக் கழகத்தின் குறிப்பு, பெருமிதம் பொங்கக் குறிப்பிடுகிறது.

### இந்தி எதிர்ப்பில் கைது

1964-ஆம் ஆண்டில், இந்தி எதிர்ப்புப் போராட்டம் தீவிரமாகத் தொடங்கிய காலகட்டத்தில், மோகன் கல்லூரி இறுதியாண்டு படித்துக்கொண்டிருந்தார். கோவையில் நடைபெற்ற வீதிப் போராட்டத்தின்போது, கோவை சலிவன் வீதி தபால் நிலையம் தீக்கிரையாக்கப்பட்டது. அதன் காரணமாகப் புனையப்பட்ட வழக்கில் கைதுசெய்யப்பட்டு, சிறைக்குச் சென்றார். அப்போது தொடங்கிய சிறைப்பயணம் கழகத்தின் ஒவ்வொரு போராட்டத்தின்போதும் தொடர்ந்தது. 1972-ஆம் ஆண்டில் கழக அமைப்புத் தேர்தலில் போட்டியிட்டு, நகரக் கழக துணைச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றினார்.

பேரறிஞர் அண்ணாவுக்குப் பின், கலைஞர் தலைமையை ஏற்றதும், கட்சி பிளவுபட்ட இரண்டு காலகட்டங்களில் பலர் கழகத்தை விட்டுச் சென்றபோதும், சென்றவர்கள் அழைத்தபோதும், அதை மறுத்தவர் மோகன். ‘என் தலைவர் கலைஞர் ஒருவர் மட்டுமே’ என நங்கூரம்போல நின்றவர்.

### கைகளில் விலங்குடன்

1975-ஆம் ஆண்டில் நெருக்கடி நிலை காலத்தில், நாடு முழுவதிலும் பல அரசியல் கட்சித் தலைவர்கள் கைதுசெய்யப்பட்டனர். தமிழ்நாட்டில் மட்டும் கைது படலம் நடைபெறவில்லை. காரணம், கருத்துரிமைக்காக நின்றது கழக ஆட்சி. மாவட்டக் கழக மாநாடுகளை நடத்தி, ஒவ்வொரு மாநாட்டிலும் நெருக்கடி நிலைக்கு எதிரான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அத்தனை மாவட்ட மாநாடுகளிலும் கலந்துகொண்டு அவசர நிலைக்கு எதிராக முழங்கியவர் இரா.மோகன். மாவட்ட மாநாடுகளில் தொடர்ச்சியாக 1975-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் கோவையில் நடைபெற்ற மாநில மாநாட்டில் கலந்து கொண்ட தலைவர்கள், அவசர நிலைக்கு எதிராக உரத்துக் குரல் எழுப்பினர். ஒன்றிய அரசு, அவசர நிலை அறிவிப்பை உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும் என்று கலைஞரின் குரலை, கழகத்தின் குரலை உறுதியுடன் முழங்கியவர் மோகன்.

கழகத்தின் ஆட்சி கலைக்கப்பட்டபோது, கழகத்தினர் பலரும் கைதுசெய்யப்பட்டனர். கோவையில் கழக முன்னணியினருடன் இரா.மோகன் அவர்களும் கைதுசெய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டார். அவர் மிசா கைதியாக இருந்த நேரத்தில், அவரது தந்தையார் மறைவெய்தினார். தந்தையின் இறுதிச்சடங்கு நடத்த அவருக்கு ஒருநாள் மட்டும் பரோல் வழங்கப்பட்டது. கையில் விலங்குடன் வந்து, தந்தையின் மரணத்தில் பங்கேற்றவர் மோகன்.

### நாடாளுமன்றவாதி

தொய்வில்லாமல் கழகப் பணிகளில் மட்டுமே கவனம் செலுத்திவந்த மோகனுக்கு, 1980-ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் கோவை தொகுதியில் போட்டியிடும் வாய்ப்பை வழங்கினார் கலைஞர். கலைஞரின் நம்பிக்கையைப் பெற்ற மோகன், அந்த ஆண்டு கழகத்தின் நாடாளுமன்ற உறுப்பினராக டெல்லியில் முழங்கினார்.

> “கோவை கழகத்தின் நிறம் மாறாத பூக்களில் ஒருவர் இரா.மோகன்” என முத்தமிழறிஞர் போற்றிய உடன்பிறப்பு.

1985-ஆம் ஆண்டு நடைபெற்ற இந்தித் திணிப்புக்கு எதிரான சட்ட நகல் எரிப்புப் போராட்டத்தில் கலந்துகொண்டபோது கைதுசெய்யப்பட்டார். 1989-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலின்போது, சிங்காநல்லூர் தொகுதியில் கழக வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றிபெற்று, சட்டமன்ற உறுப்பினராகவும் பணியாற்றினார்.

1995-ஆம் ஆண்டு சென்னை, அண்ணா அறிவாலயத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களைச் சந்தித்த நேரத்தில், அவருக்குக் கடுமையாக வியர்த்ததைப் பார்த்த கலைஞர், உடனடியாக சிகிச்சை பெற ஏற்பாடுகள் செய்தார். தனக்கு மாரடைப்பு ஏற்பட்டதுகூட அறியாமல் இருந்த அவர், கலைஞர் அவர்களின் அக்கறையினால் உயிர் பிழைத்ததை வாழ்வில் மறக்க முடியாத நிகழ்வு எனக் குறிப்பிட்டார்.

### அண்ணா விருது

இத்தகைய சிறப்புக்குரிய மோகன் அவர்களின் கழகப் பணியினைப் போற்றும் வகையில், 2022-ஆம் ஆண்டு விருதுநகரில் நடைபெற்ற முப்பெரும் விழாவில் **‘அண்ணா விருது’** அளித்துப் பெருமை சேர்த்தார் இன்றைய கழகத் தலைவர் அவர்கள். வயது மூப்பு மற்றும் உடல்நலக்குறைவு காரணமாக சிகிச்சை பெற்றுவந்த மோகன் அவர்கள், 2024-ஆம் ஆண்டு டிசம்பம் மாதம் 10-ஆம் தேதி மறைந்தபோது, கோவை மாவட்டக் கழகத்தினர் திரண்டுவந்து, அவருக்கு மரியாதை செய்தனர். 81 வயதில் மறைந்த முன்னோடி மோகனுக்கு, கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளர் நேரில் சென்று, இறுதிமரியாதை செய்தார்.

கழகத் தலைவர் வெளியிட்ட இரங்கல் அறிக்கையில், ‘முத்தமிழறிஞர் கலைஞரின் பேரன்புக்குப் பாத்திரமானவர், நான் எப்போது கோவை சென்றாலும் மோகன் அவர்களை சந்திக்கத் தவறியதில்லை’ என தனது நினைவுகளைப் பகிர்ந்திருந்தார். அடுத்த சில நாட்களில் கோவைக்கு நேரில் சென்று, அவரது குடும்பத்தினருக்கு கழகம் என்றென்றும் துணை நிற்கும் என நம்பிக்கை அளித்து, “கோவை மாவட்டக் கழகத்தின் தூண்களில் ஒருவர்” என பெருமையுடன் குறிப்பிட்டு, கழகத்தின் பேரிழப்பு என வருந்தினார். மோகன் அவர்களின் நினைவுகளை, உழைப்பினை மாவட்டக் கழகம் என்றென்றும் உயர்த்திப் பிடிக்கும்.

...துடிக்கும்

## பா.ஜ.க. அரசின் ஒருசார்பு மனநிலை!

அயோத்தியில் பாபர் மசூதி இருந்த இடம், இந்துக்களுக்குச் சொந்தமானது என 2019-ஆம் ஆண்டில் உச்ச நீதிமன்றம் தீர்ப்பு அளித்த பிறகு, 5 ஆண்டுகளில் ராமர் கோயிலைக் கட்டி முடித்து, ஜனவரி 22, 2024 அன்று குடமுழுக்கு விழாவும் நடத்திவிட்டார்கள். உச்ச நீதிமன்றத்தின் அத்தீர்ப்பில், முஸ்லிம்களுக்கு மாற்று இடமாக 5 ஏக்கர் வழங்க வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. அதன்படி, மாநில சன்னி பிரிவு மத்திய வக்ஃப் வாரியத்திற்கு அயோத்தி நகரத்திலிருந்து 25 கி.மீ தொலைவில் உள்ள தன்னிபூர் கிராமத்தில் நிலம் ஒதுக்கப்பட்டது.

அப்போதைய அயோத்தி மாவட்ட நீதிபதி அனுஜ்குமார் ஜா, தன்னிபூரில் அமைந்துள்ள நிலத்தை, ஆகஸ்ட் 3, 2020 அன்று ஒப்படைத்துவிட்டார். ஆனால், அந்த இடத்தில் மசூதி கட்ட பொதுப்பணி, மாசுக் கட்டுப்பாடு, விமானப் போக்குவரத்து, நீர்ப்பாசனம், வருவாய், நகராட்சி மற்றும் தீயணைப்பு சேவைகள் உள்ளிட்ட துறைகளிடமிருந்து அனுமதி பெறவில்லை எனக்கூறி, மசூதி அறக்கட்டளையின் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதாக செப்டம்பர் 16-ஆம் தேதி ‘அயோத்தி மேம்பாட்டு ஆணையம்’ கடிதம் மூலம் தெரிவித்துள்ளது.

பத்திரிகையாளர் ஓம் பிரகாஷ் சிங், தகவல் அறியும் உரிமை சட்டத்தில் எழுப்பிய கேள்வி மூலம், இது தெரியவந்துள்ளது. மசூதி அறக்கட்டளை இந்தத் திட்டத்திற்கான விண்ணப்பம் மற்றும் ஆய்வுக் கட்டணமாக ரூ.4,02,628 டெபாசிட் செய்துள்ளது. உத்தரப்பிரதேச அரசு, ராமர் கோயிலைக் கட்டுவதற்குக் காட்டிய அக்கறை மற்றும் வேகத்தில் ஒரு சதவிகிதம்கூட மசூதி விவகாரத்தில் காட்டவில்லை என்று சமூக ஆர்வலர்கள் பலரும் கண்டனம் தெரிவித்துள்ளனர். இது உத்தரப்பிரதேச மாநில அரசின் அப்பட்டமான இஸ்லாமிய வெறுப்பு மனநிலை என்றும் பலர் கண்டித்துள்ளனர்.

## ஃப்ளாஷ்பேக்



### பன்மடங்கு முக்கியத்துவம் பெற்ற நிகழ்ச்சி!



இலக்கியா நடராஜன்

2015 - ஆம் ஆண்டு, முன்னாள் நிதியமைச்சர் ப.சிதம்பரம் அவர்கள் குறித்து நான் தொகுத்த ‘ப.சிதம்பரம் - ஓர் பார்வை’ நூலினை முத்தமிழறிஞர் கலைஞர் கைகளால் வெளியிட வேண்டுமென தேதி பெறுவதற்காகச் சென்றிருந்தேன். முன்னதாக, நூல் வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு சிறப்பிக்க, ‘உலகநாயகன்’ கமல்ஹாசன், ‘சூப்பர் ஸ்டார்’ ரஜினிகாந்த் ஆகியோரின் சம்மதம் பெற்றுள்ளதை கலைஞரிடம் குறிப்பிட்டதும், “என்னய்யா சொல்ற” என வியப்படைந்து பாராட்டினார். அந்த நிகழ்ச்சி கலைஞர் அவர்களின் வருகையால், பன்மடங்கு முக்கியத்துவம் பெற்றது.

**- இலக்கியா நடராஜன், எழுத்தாளர் - பேச்சாளர், சிவகங்கை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### இந்திய வரலாற்றில் இல்லாத போராட்டம்!

1965-ஆம் ஆண்டு பிப்ரவரியில் மாணவர்களின் இந்தித் திணிப்பு எதிர்ப்பு அறப்போராட்டம் தமிழ்நாட்டையே முடக்கியது. இந்திய வரலாற்றிலேயே மூன்று நாட்கள் தொடர்ந்து, ஓடவேண்டிய இரயில்கள் ஓடவில்லை. வந்து சேரவேண்டிய இரயில்கள் வரவில்லை. தந்திப் போக்குவரத்து முழுவதுமாகத் துண்டிக்கப்பட்ட நிலை நீடித்தது.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.